தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

**பெருஞ்சாணி அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை**

குமரி மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் மூன்று நாள்களாக தணிந்திருந்த மழை திங்கள்கிழமை மீண்டும் பெய்தது. மாவட்டத்தில் தொடர்மழை காரணமாக அணைகள் நிரம்பிய நிலையில் கடந்த மூன்று வியாழக்கிழமை முதல் மழை தணிந்திருந்தது. இந்நிலையில் திங்கள் கிழமை பெருஞ்சாணி அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மற்றும் திருவட்டாறு, குலசேகரம், அருமனை, திற்பரப்பு, ஆறுகாணி உள்ளிட்டப் பகுதிகளில் பலத்த இடி மின்னுடன் கன மழை பெய்தது. எனினும் இந்த மழை பேச்சிப்பாறை அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தீவிரமாகப் பெய்யவில்லை. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் தற்போது 70 அடியை நெருங்கிய நிலையில் உள்ள நிலையில் மழையின் காரணமாக இந்த அணையில் வெள்ள அபாய எச்சரிக்கை அளவான 71 அடி நீர்மட்டம் எட்டும் வாய்ப்பு உள்ளது என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். அதேவேளையில் பேச்சிப்பாறை அணையில் உபரி நீர் திறப்பதற்கு மேலும் 300 மில்லியன் கன அடி நீர் பெருக வேண்டு மென்றும் பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

**பாபநாசம் அணையிலிருந்து பாசனத்துக்கு 1,000 கனஅடி திறப்பு**

தொடர் மழை காரணமாக மூடப்பட்டிருந்த பாபநாசம், சேர்வலாறு அணைகளிலிருந்து பாசனத்துக்காக நொடிக்கு 1,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்கள்வரை பரவலாக மழை பெய்தது. மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் நீடித்த மழையால் கடனாநதி, ராமநதி, அடவிநயினார், கருப்பாநதி உள்ளிட்ட அணைகள் நிரம்பின. நீர்மட்டம் கணிசமாக உயர்ந்ததையடுத்து, பாபநாசம், சேர்வலாறு அணைகள்

மூடப்பட்டன. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் குடிநீர்த் தேவைக்கு மட்டும் அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில், தற்போது பிசான சாகுபடி பணிகள் தொடங்கியதால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. திங்கள்கிழமை பாபநாசம், சேர்வலாறு அணைகளிலிருந்து பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைக்காக 1,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. மணிமுத்தாறு அணையில் பெருங்கால் மதகு பாசனத்துக்கு 35 கனஅடியும், கடனாநதி அணையிலிருந்து 110 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 40 கனஅடியும், கருப்பாநதி அணையிலிருந்து 25 கனஅடியும், அடவிநயினார் அணையிலிருந்து 80 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 111.00 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 121.88 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 80.00 அடியாகவும் இருந்தது. ஊருக்குள் புகுந்த தண்ணீர்: கல்லிடைக்குறிச்சி, சேரன்மகாதேவி, பத்தமடை பகுதியில் தற்போது கார் பருவ அறுவடை நடைபெற்று வருவதால், கன்னடியன் கால்வாயில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இந்நிலையில், திங்கள்கிழமை இக்கால்வாயில் திடீரென 400 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கல்லிடைக்குறிச்சி திம்மராஜசமுத்திரம் தெருக்களில் 3 அடி உயரத்திற்கு கால்வாய் நீர் புகுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. தகவலறிந்த பேரூராட்சித் தலைவர் க. இசக்கிபாண்டியன், அதிகாரிகளை தொடர்புகொண்டு கால்வாயில் தண்ணீரை குறைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**<u>உரம் விநியோகத்தைக் கண்காணிக்க விவசாயிகள், அலுவலர்கள் குழு</u>**

உரம் விநியோகத்தைக் கண்காணிக்க முன்னோடி விவசாயிகள் மற்றும் வேளாண் அலுவலர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் நிகழ் ஆண்டு பயிர் சாகுபடிக்கான உரங்கள் நியாயமான விலையில், தடையின்றி விவசாயிகளுக்கு கிடைக்க

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உர விநியோகத்தைக் கண்காணிக்கவும், உரவிநியோகம் தொடர்பான புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கவும் ஒவ்வொரு வட்டாரத்திலும் முன்னோடி விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநர், வேளாண் அலுவலர்கள் தலைமையில் இக்குழு கண்காணிப்பை மேற்கொள்ளும். உர விநியோகத்தில் புகார்கள் இருப்பின் கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளலாம். மதுரை கிழக்கு - 99941-35950, மதுரை மேற்கு - 99446-44894, திருப்பரங்குன்றம் - 98655-75946, மேலூர் - 94424-22869, கொட்டாம்பட்டி - 99444-32627, வாடிப்பட்டி - 98659-42584, அலங்காநல்லூர் - 917668-82559, திருமங்கலம் - 99424-67870, கள்ளிக்குடி - 94426-40919, தே.கல்லுப்பட்டி - 99944-07172, உசிலம்பட்டி - 94865-01681,செல்லம்பட்டி - 94430-04662, சேடபட்டி - 94866-01265.

**<u>கேசர்குளி அல்லா நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு</u>**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே உள்ள கேசர்குளி அல்லா நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திங்கள்கிழமை திறக்கப்பட்டது. பாலக்கோடு வட்டத்திற்குள்பட்ட பேலுஅள்ளி கிராமத்தில் கேசர்குளிஅல்லா அணை உள்ளது. இந்த அணையின் முழுக் கொள்ளளவு 134 மில்லியன் கன அடி ஆகும். அண்மையில் பெய்த மழையால் இந்த அணை நிரம்பியது. இந்த அணையில் தற்போது 127 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. எனவே, இந்த நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்குத் தண்ணீரைத் திறந்துவிட தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது. இதைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் பாசனத்திற்கு தண்ணீரை திறந்து வைத்துப் பேசியது: கேசர்குளி அல்லா நீர்த்தேக்கத்திலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் வருகிற 105 நாள்களுக்கு 91.77 மில்லியன் கன அடி முறை

வைத்து நீரின் இருப்பு அளவை பொருத்தும், நீர் வரத்தைப் பொருத்தும் திறந்து விடப்படும். இந்தத் தண்ணீர் மூலம், திருமல்வாடி, பெரமானஅள்ளி, பேவுஅள்ளி, சீரியம்பட்டி, எர்ரகுட்டனஅள்ளி, பூதிஅள்ளி, நல்லூர் ஆகிய கிராமங்களில் உள்ள 4,000 ஏக்கர் பரப்பளவு நிலம் பாசன வசதிபெறும். எனவே, இந்தத் தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக அளவில் விளைச்சல் செய்து பயனடைய வேண்டும் என்றார் ஆட்சியர். இந்த நிகழ்ச்சியில், பாலக்கோடு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.அன்பழகன், செயற்பொறியாளர் ஆர்.பாலசுப்பிரமணியன், உதவிச் செயற்பொறி யாளர்கள் ஆசைத்தம்பி, சேதுராமன், கோட்டாட்சியர் கே.நாராயணன், ஒன்றியக் குழுத் தலைவர் கருணாகரன், அரசு அலுவலர்கள் கலந்து

கொண்டனர்.

**<u>சேவூரில் ரூ. 90 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம்</u>**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ. 90 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், 6,000 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 4,020 முதல் ரூ. 4,250 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,700 முதல் ரூ. 3,900 வரையிலும், மூன்றாவது ரகம் ரூ. 2,900 முதல் ரூ. 3,400 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 90 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 21 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 693 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

## உப்பாறு அணையில் வனத்துறை அமைச்சர் ஆய்வு

தாராபுரம் அருகே உள்ள உப்பாறு அணையில் வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். பரம்பிக்குளம்-ஆழியாறு கசிவு நீரை சேமித்து வைப்பதற்காக தாராபுரத்திலிருந்து 12-ஆவது கிலோ மீட்டரில் உப்பாறு அணை கட்டப்பட்டது. இந்த அணையின் மூலம் வேலயுதம்பாளையம், கெத்தல்ரேவ், தொப்பம்பட்டி, புத்தூர், நஞ்சியம்பாளையம், சூரியநல்லூர், கண்ணன்கோயில், சங்கரண்டம்பாளையம் ஆகிய கிராமங்களை சேர்ந்த 6,060 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக அணை பகுதியில் போதிய மழை இல்லாததாலும், அணைக்கு தண்ணீர் வழங்க பரம்பிக்குளம்- ஆழியாறு பகுதி விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததாலும் அணை நீரின்றி வறண்டு காணப்பட்டது. இந்நிலையில், தாராபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில தினங்களுக்கு முன் நல்ல மழை பெய்ததை தொடர்ந்து அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக 3 ஆண்டுகளுக்கு பிறகு அணை, தற்போது 15 அடியை எட்டியுள்ளது. இதைத் தொடர்ந்து அணையை வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன், ஆட்சியர் கு.கோவிந்தராஜ் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது அப்பகுதி விவசாயிகள் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தில் 3-ஆம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்க வேண்டி இருப்பதால் உப்பாறு அணைக்கு வந்துகொண்டிருந்த தண்ணீர் கடந்த 3 நாள்களுக்கு முன்பு நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது உப்பாறு அணையின் நீர்மட்டம் 14.90 அடி. அணையில் 252 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. எனவே பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது குறித்து எந்த திட்டமும் இல்லை. வரும் ஜனவரி மாதம் உப்பாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் என

விவசாயிகளிடம் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆய்வின் போது எம்எல்ஏ கே.பொன்னுச்சாமி, கோட்டாட்சியர் எஸ்.சரவணமூர்த்தி, வட்டாட்சியர் ஆறுமுகம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**<u>நவீன கரும்பு சாகுபடி பயிற்சி</u>**

மேல்மலையனூர் பகுதியில் நடமாடும் வாகனத்தில் நவீன கரும்பு சாகுபடி பயிற்சி நடைபெற்றது. செஞ்சி வட்டம் செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் தனி பேருந்தில் நவீன கரும்பு சாகுபடி குறித்த ஒலி, ஒளி படக் காட்சிகள் மூலம் விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடைபெற்றது. துணைப் பொது மேலாளர் விஜயகுமார் தலைமை வகித்தார். இதில் மேலாளர் வெங்கடேச பெருமாள், கரும்பு அலுவலர் மணிகண்டன், சாலிடர் நிறுவனத் தலைவர் தேவராசன் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர். செக்கடிக்குப்பம், நீலாம்பூண்டி, தாயனூர், சாத்தாம்பாடி, பெருவளூர் உள்ளிட்ட கிராமங்களில் பயிற்சி முகாம் நடந்தது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>ரூ.7.25 லட்சம் மதிப்பில் வேளாண் பொருட்கள் ஏலம்</u>**

அந்தியூர் : அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்துக்கு, நேற்று, அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம், சங்கராப்பாளையம், கொளத்தூர், சென்னம்பட்டி, பர்கூர் உட்பட பல பகுதிகளில் இருந்தும், தேங்காய், எள், நிலக்கடலை, மக்காச்சோளம் உட்பட வேளாண் விளை பொருட்கள், ஏல முறை விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.நேற்று, 30 ஆயிரம் தேங்காய், குறைந்த விலையாக, 3.50 ரூபாய்க்கும், அதிகப்பட்ச விலையாக, 16.50 ரூபாய்

என, 3 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரைத்தேங்காய், 50 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 56.56 முதல், 94.18 ரூபாய் வரை, 2 லட்சம் ரூபாய்க்கும், சிவப்பு ரக எள், 7 மூட்டை, கிலோ ஒன்று, 64.29 முதல், 94.18 ரூபாய் என, 35 ஆயிரம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், 40 மூட்டைகள், கிலோ ஒன்று, 10.81 முதல், 11.64 ரூபாய் வரை, 40 ஆயிரம் ரூபாய்க்கும், நிலக்கடலை, 158 மூட்டைகள், பச்சை கிலோ ஒன்று, 12.35 முதல், 18.50 வரையும், காய்ந்தது, 36.35 முதல், 48 ரூபாய் வரை, 1.50 லட்சம் ரூபாய் என, மொத்தம், 7.25 லட்சம் ரூபாய்க்கும் வர்த்தகம் நடந்தது. இத்தகவலை, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

***<u>சீசன் உச்சத்தால் நிலக்கடலை விற்பனை விறு விறு</u>***



சேலம்: சேலத்தில், நிலக்கடலை சீசன் உச்சத்தை எட்டி உள்ளதால், லீபஜார், வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடப்பு சீசனில், 50 ஆயிரம் மூட்டைகள், நான்கு கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.சேலம் மாவட்டத்தில், பனைமரத்துப்பட்டி, வீரபாண்டி, வேம்படிதாளம், ஓமலுார், அயோத்தியாபட்டினம், வாழப்பாடி உள்ளிட்ட இடங்களில் பயிரிடப்பட்ட நிலக்கடலை அறுவடை சென்ற ஆகஸ்டில் துவங்கியது.சேலம் லீபஜார், பள்ளப்பட்டி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு, செப்டம்பர் முதல் நிலக்கடலை விற்பனைக்கு வந்து கொண்டுஉள்ளது.இதை சேலம், ராசிபுரம், ஈரோடு, மதுரை, கரூர், தேனி மாவட்ட வியாபாரிகள், எண்ணெய் ஆலை உரிமையாளர்கள் வாங்கிச் செல்கின்றனர்.அந்த வகையில், சேலம் பள்ளப்பட்டி வேளாண்மை கூட்டுறவு விற்பனை

சங்கத்தில் நடப்பாண்டில் நேற்று வரை, 17,360 மூட்டைகள், 1.50 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுஉள்ளது.நேற்று மட்டும், 700 மூட்டை, ஏழு லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இதில், ஈரப்பதம் கொண்ட நிலக்கடலை, 60 கிலோ மூட்டை, 809 ரூபாய் முதல், 1,169 ரூபாய் வரையிலும், காய்ந்த ஈரப்பதம் இல்லாத நிலக்கடலை, 1,346 ரூபாய் முதல், 1,620 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் பள்ளப்பட்டி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், 15 ஆயிரம் மூட்டைகள் நிலக்கடலை மட்டுமே விற்பனை செய்யப்பட்டது.ஆனால், நடப்பாண்டில் நிலக்கடலை வரத்து அதிகரித்ததோடு, நவம்பர் மாதத்திலும் இதன் வரத்து விறுவிறுப்பாக உள்ளது.சேலம் லீபஜாரை பொறுத்தவரையில், இது வரையில் நடப்பாண்டில், 33,130 மூட்டைகள், 2.50 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.இதில், ஈரப்பதம் கொண்ட நிலக்கடலை, 900 ரூபாய் முதல், 1,250 ரூபாய் வரையிலும், ஈரப்பதம் இல்லாத காய்ந்த நிலக்கடலை, 1,450 ரூபாய் முதல், 1,750 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டின் நிலக்கடலை சீசன் இந்த மாதம் இறுதி வரை, தொடரும் என, விவசாயிகள் தெரிவித்தனர்.

## கால்நடைகளுக்கு மருத்துவ முகாம்

திருத்தணி: ஊராட்சியில் ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு, இலவச மருத்துவ முகாம், இன்று நடைபெறுகிறது. திருத்தணி ஒன்றியம், பட்டாபிராமபுரம் அரசு பள்ளி அருகில், திருத்தணி சிண்டிகேட் வங்கி மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகியவை சார்பில், கால்நடை மருத்துவ முகாம், இன்று காலை 8:00 மணிக்கு துவங்கி, மதியம் 1:00 மணி வரை நடக்கிறது. இதில், இரண்டு மருத்துவர்கள், ஒரு கால்நடை ஆய்வாளர், மூன்று உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆடு,

மாடு மற்றும் கோழிகளுக்கு அறுவை சிகிச்சை, செயற்கைமுறை கருவூட்டல், மலட்டுத்தன்மை நீக்க சிகிச்சை, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், சினை பரிசோதனை, தடுப்பூசி போடுதல் மற்றும் பொது மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## <u>சம்பா நெல் நடவுப் பணிகள் மயிலம் பகுதியில் தீவிரம்</u>

மயிலம்: மயிலம் ஒன்றியப் பகுதிகளில் சம்பா நெல் நடவுப்பணிகள் தீவிரமாக நடக்கிறது. மயிலம் ஒன்றியம் எடப் பாளையம், கூட்டேரிப்பட்டு, ரெட்டணை, பெரியதச்சூர், தழுதாளி, அவ்வையர்குப்பம், முப்புளி கிராமங்களில் நடப்பு சம்பா பருவத்திற்கு நெல் சாகுபடி செய்வது வழக்கம். மாவட்டத்தில் தென்மேற்கு, வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால் விவசாயிகள் மிகுந்த கவலையடைந்தனர். மயிலம் பகுதிலுள்ள கிணற்றுப் பாசன விவசாயிகள் தண்ணீர் இறைத்து மிகுந்த ஆர்வத்துடன் சம்பா நெல் நடவுப் பணிகளை துவக்கியுள்ளனர். ஏரி, மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் மழை பெய்யும் என நம்பி நாற்றுகளை வளர்த்து வைத்துள் ளனர். தொழுவுரமிட்டு உழவுப் பணிகளை முடித்து மழைக் காக கவலையுடன் காத்திருக்கின்றனர். விவசாயிகளுக்கு நடப்பு பட்டத்திற்கு தேவையான உரங்கள், களைக்கொல்லிகள் மற்றும் ஈடு பொருட்களை மானியத்தில் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## <u>நவீன கரும்பு சாகுபடி பயிற்சி</u>

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் பகுதியில் நடமாடும் வாகனத்தில் நவீன கரும்பு சாகுபடி குறித்த பயிற்சி நடந்தது. செஞ்சி தாலுகா செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் தனி பேருந்தில் நவீன கரும்பு சாகுபடி குறித்த ஒலி, ஒளி படக்காட்சிகள் மூலம் விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. துணை பொது மேலாளர் விஜயகுமார் தலைமை தாங்கினார். இதில் மேலாளர் வெங்கடேச பெருமாள், கரும்பு அலுவலர்

மணிகண்டன் , சாலிடர் நிறுவன தலைவர் தேவராசன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். செக்கடிக்குப்பம், நீலாம்பூண்டி, தாயனூர், சாத்தாம்பாடி, பெருவளூர் உள்ளிட்ட கிராமங்களில், பயிற்சி முகாம் நடந்தது.

<u>கார்த்திகை பட்ட "எள்' சாகுபடி குறித்து அறிவுரை</u>

தர்மபுரி: கார்த்திகை பட்ட எள் சாகுபடி குறித்தும், தொழில் நுட்பங்கள் குறித்தும், வேளாண்மை துறையினர், விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர்.இதுகுறித்து, வேளாண்மைத்துறையினர் வெளியிட்டுள்ள அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில், நிலக்கடலைக்கு அடுத்தபடியாக அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்துப் பயிராக எள் உள்ளது. கார்த்திகை பட்ட எள் சாகுபடி செய்வதற்காக, விவசாயிகள், தங்கள் நிலங்களை தயார்படுத்திக் கொண்டு இருக்கின்றனர். விவசாயிகள், எள் பயிர் சாகுபடியில், கீழ்வரும் நவீன தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் உயர் விளைச்சல் பெறலாம். கார்த்திகைப் பட்டத்தில், சாகுபடி செய்ய கோ1, டி.எம்.வி., 3, டி.எம்.வி., 5, மற்றும் எஸ்வி.பிஆர்., 1 ஆகியவை தகுந்த ரகங்களாகும்.எள் பயிரிட மணற்பாங்கான வண்டல், செம்மண் மற்றும் கருவண்டல் நிலங்கள் ஏற்றவை. எள் விதைகள் மிகவும் சிறியதாக இருப்பதால், விதைகள் நன்கு முளைக்க மண்ணிலுள்ள கட்டிகளை உடைத்து நுண்மைப்படுத்த வேண்டும். எனவே, நிலத்தை இருமுறை டிராக்டர் கலப்பையில், மூன்று முறை, அல்லது ஐந்து முறை நாட்டுக் கலப்பையால் உழ வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு ஐந்து டன் தொழுவுரம் இடவேண்டும். இறவை எள் சாகுபடிக்கு கிடைக்கும் நீர் மற்றும் நிலத்தின் சரிவைப் பொறுத்து, 10 ச.மீ., (அ) 20 ச.மீ., அளவிற்கு நீர் தேங்காத நன்கு சமன் செய்யப்பட்ட பாத்திகள் அமைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு, இரண்டு கிலோ விதைபோதுமானது. விதை மூலம் பரவும் நோய்களை தடுக்க ஒரு கிலோ விதைக்கு, இரண்டு கிராம் கார்பன்டாசிம்

(அ) நான்கு கிராம் திரம் (அ) நான்கு கிராம் டிரைக்கோடெர்மா விருடி என்ற அளவில் கலந்து, 24 மணிநேரம் காற்றுபுகாத வண்ணம் வைத்திருந்து பின்னர், உயிர்உர விதைநேர்த்தி செய்ய வேண்டும். ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியாவை ஆறிய அரிசிக் கஞ்சியில் கலந்து, ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் விதை நேர்த்தி செய்து, நிழலில் உலர்த்தி, பின் விதைப்பு செய்ய வேண்டும்.விதைகள் சீராக பரவ, இரண்டு கிலோ விதையுடன், எட்டு கிலோ மணல் கலந்து நிலத்தின் மேற்பரப்பில் சீராக விதைக்க வேண்டும். விதைத்த, 15ம் நாள், செடிக்குச் செடி, 15 செ.மீ இடைவெளிவிட்டு செடிகளை கலைத்து விட வேண்டும். பின், 30ம் நாள் செடிக்கு செடி, 30 செ.மீ இடைவெளிவிட்டு மீண்டும் ஒருமுறை கலைத்துவிடுவது சிறந்தது. மண் பாரிசோதனைப்படி உரமிடுதல் சிறந்தது. இல்லையெனில், இறவை எள்ளுக்கு, ஒரு ஏக்கருக்கு, 14:9:9 கிலோ தழை , மணி மற்றும் சாம்பல் சத்து தரவல்ல உரங்களை இடவேண்டும். விதைப்பிற்கு பின், ஒரு ஏக்கருக்கு, இரண்டு கிலோ மாங்கனீசு சல்பேட் நுண்ணூட்டச்சத்தினை, எட்டு கிலோ நன்கு மட்கிய தொழுவுரத்துடன் கலந்து சீராக தூவ வேண்டும். களைகளை கட்டுப்படுத்த பென்டிமெத்தலின், 1.3 லிட்டர் களைக்கொல்லி மருந்தை, 26 லிட்டர் நீரில் கலந்து விதைத்த, மூன்று நாட்களுக்குள் சீராக தெளிக்கவும். அல்லது, 10 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். களைக்கொல்லி பயன்படுத்தாத நிலையில் விதைத்த, 15 நாட்கள் கழித்து, ஒரு கைக்களையும், 35 நாட்கள் கழித்து, இரண்டாவது கைக்களையும் எடுத்து களைகளை கட்டுப்படுத்தலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.11.25 லட்சம் மதிப்பில் தேங்காய், வாழைத்தார் ஏலம்

கோபி : கோபி, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 11.25 லட்சம் ரூபாய் மதிப்பில், வாழைத்தார்கள் மற்றும் தேங்காய் ஏலம் போனது. கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், புதன் மற்றும் சனிக்கிழமைகளில், ஏலம் நடக்கும். இதன்படி, நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், மொத்தம், 14 ஆயிரம் வாழைத்தார் வரத்தானது. கதளி ஒரு கிலோ, 30 ரூபாய்க்கும், நேந்திரம், 28 ரூபாய்க்கும் விலை போனது.செவ்வாழை தார், 500 ரூபாய்க்கும், ரொபஸ்டா, 420 ரூபாய், தேன்வாழை, 550 ரஸ்த்தாளி, 425 ரூபாய், மொந்தன், 350 ரூபாய், பூவன், 370 ரூபாய், பச்சைநாடான், 300 ரூபாய்க்கு விலை போனது.விற்பனைக்கு வந்த அனைத்து தார்களும், மொத்தம், பத்து லட்சம் ரூபாய்க்கு விலைபோனது.இந்த தார்களை, திருப்பூர் மற்றும் ஊத்துக்குளி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.இதேபோல், தேங்காய்களுக்கான ஏலமும் நடந்தது. மொத்தம், 13 ஆயிரம் தேங்காய் வரத்தனது. 9 முதல், 17 ரூபாய் வரை விலை போனது. அனைத்து தேங்காயும், 1.25 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## ராட்சத கள்ளிச்செடிகளில் 'பெருவியன்' ஆப்பிள்; அதிகளவில் விளைவிக்க ஆய்வாளர்கள் 'ஐடியா'

குன்னூர் : குன்னூரில் வளர்ந்துள்ள ராட்சத கள்ளிச்செடி, பார்வையாளர்களை வியப்படைய செய்கிறது; இதில், மருத்துவ குணம் வாய்ந்த 'பெருவியன்' ஆப்பிள் அதிகளவில் விளைந்துள்ளது. நீலகிரி மாவட்டம் குன்னூரில், குளிர் மற்றும் வெப்ப காலநிலைகளில் வளரும் அரிய வகை மரங்கள், மூலிகை செடிகள் வளர்கின்றன. குன்னூர் சிம்ஸ்பார்க்கில் இத்தகைய பல செடிகள், மரங்கள் உள்ளன.

இந்நிலையில், குன்னுார் டான்டீ அலுவலகத்தில் இருந்து பெட்போர்டு செல்லும் குறுக்கு சாலையில், உள்ள ஒரு பங்களா வீட்டு தோட்டத்தில் வளர்ந்துள்ள கள்ளிச்செடிகள், அவ்வழியாக செல்பவர்களை ஆச்சரியமடைய செய்கின்றன. இதில், 'சேரியஸ் கேக்டஸ், மல்பேரி கேக்டஸ்' ஆகிய செடிகள் ஒரே இடத்தில் சுமார் 20 அடிக்கு மேல் வளர்ந்துள்ளன. தாவரவியல் ஆய்வாளர் டாக்டர் ராம்சுந்தர் கூறுகையில், “பொதுவாக குளிர் பிரதேசங்களில் கள்ளிச்செடி வகைகள் அதிகளவில் வளராது. ஆனால், இங்குள்ள காலநிலை இந்த கள்ளிச்செடிக்கு ஏற்றதாக உள்ளது. 'சேரியஸ்' கள்ளிச்செடியில், விளையும் பழங்கள், நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்கவல்லது. ஆஸ்திரேலியாவில் அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது,” என்றார். தாவரவியல் ஆய்வாளர் பேராசிரியை ரோசி டிலீமா கூறுகையில், “மக்களுக்கு பயன்படும் கள்ளிச்செடிகளை, திசு வளர்ப்பு முறையில் அதிகரிக்க செய்து, பல இடங்களில் பயிரிட்டு வளர்த்தால் பெரும் பயன் கிடைக்கும்,” என்றார்.

## <u>மலை காய்கறி உற்பத்தி அதிகரிப்பு</u>

கூடலுார் : கூடலுார் அருகே நடுவட்டம் பகுதியில் அதிகளவில் மலை காய்கறிகளை விளைவிக்கும் பணியில் சிறு விவசாயிகள் ஈடு பட்டுள்ளனர். ஊட்டி, நடுவட்டம் உள்ளிட்ட பகுதிகளில் விளையும் காரட், முட்டைகோஸ், உருளைகிழங்கு உள்ளிட்ட மலை காய்கறிகளுக்கு மார்க்கெட்டில் தனியிடம் உண்டு. இதன் தனிப்பட்ட சுவையே இதற்கு காரணமாகும்.தற்போது, பருவமழை குறைந்து விட்டதால், சிறு விவசாயிகள் மலை காய்கறி உற்பத்தியில் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக, நடுவட்டம் பகுதியில் உள்ள பல நூறு ஏக்கர் பரப்பில் தற்போது, மலை காய்கறிகளை விளைவிக்கும் பணிகளில் சிறு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.இந்த பசுமையான காட்சியை, ஊட்டி தேசிய நெடுஞ்சாலை, வழியாக செல்லும் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட

வெளி மாநில சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் ரசித்து, "போட்டோ' எடுத்து செல்கின்றனர்.

**தஞ்நசையில் சம்பா பருவ இலக்கு4.40 லட்சம் டன் நெல் கொள்முதல்**

தஞ்சாவூர் :"நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நடப்பாண்டில், சம்பா பருவத்தில் 4.40 லட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது,' என, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின், தஞ்சாவூர் முதுநிலை மண்டல மேலாளர் (பொறுப்பு) நத்தர்ஷா தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:தஞ்சாவூர் மாவட்டத்தில், காரீப் பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், 55 கிராமங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் மூலம், கடந்த, 7ம் தேதி வரை விவசாயிகளிடமிருந்து, 977 டன் கொள்முதல் செய்யப் பட்டுள்ளன.விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்குரிய கிரயத் தொகையை, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணமாக பட்டுவாடா செய்வதைத் தவிர்த்து, வங்கிகள் வழியாக, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.மேலும், சம்பா பருவத்தில், நான்கு லட்சத்து, 40 ஆயிரத்து, 470 டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தப் பருவத்தில், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நெல்லுக்குரிய தொகையை தாமதமின்றி வரவு வைக்க, விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**பாசனத்திற்கு சண்முகாநதி அணை திறப்பு! 2012ம் ஆண்டிற்கு பின் நிரம்பியது**

கம்பம் : கடந்த 2012ம் ஆண்டிற்கு பிறகு சண்முகா நதி அணை நிரம்பி வழிவதால் அணையில் இருந்து பாசனத்திற்காக நேற்று காலை தண்ணீர் திறக்கப்பட்டது. ராயப்பன்பட்டி அருகே சண்முகா நதி அணை கடந்த

2004ல் கட்டப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டிற்க திறக்கப்பட்டது. 52.5 அடி உயரம் கொண்ட இந்த அணை கடந்த சில ஆண்டுகளாக நிரம்பவில்லை. இந்த அணையால் ராயப்பன்பட்டி, ஆனைமலை யன்பட்டி, எரசை, கன்னிசேர்வைபட்டி, வெள்ளையம்மாள்புரம், அழகாபுரி, ஓடைப்பட்டி உள்ளிட்ட பல கிராமங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த கிராமங்களில் உள்ள 1,640 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும். குறிப்பாக இப்பகுதியில் உள்ள கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு வாய்ப்பு உள்ளது. போதிய மழை இல்லாததால் கடந்த 2012ம் ஆண்டிற்கு பிறகு இந்த அணை திறக்கப்படவில்லை. எனவே அணை நிரம்பவில்லை. இந்நிலையில் இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளதால் தற்போது அணை முழு கொள்ளளவை எட்டி நிரம்பி வழிகிறது. எனவே நேற்று காலை தேனி கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி அணையில் இருந்து தண்ணீரை திறந்தார். விநாடிக்கு 14.7 கனஅடி திறக்கப்பட்டது. தொடர்ந்து 90 நாட்களுக்கு தண்ணீர் விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அணைக்கு 10 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. இந்த அணை திறப்புவிழா நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், உதவி செயற்பொறியாளர் அன்புச்செழியன், உதவி பொறியாளர் சந்தனகுமார் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர். சண்முகா நதி அணையில் இருந்து 2 ஆண்டுகளுக்கு பிறகு தண்ணீர் திறக்கப்பட்டதற்கு விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

## <u>நாளை காளான் வளர்ப்பு பயிற்சி</u>

தேனி : தேனி கனரா வங்கியின் ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையத்தில் நாளை(நவ.,12) முதல் ஆறு நாட்களுக்கு இலவச காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி கட்டணம் மற்றும் உணவு இலவசம். எட்டாம் வகுப்பிற்கு மேல் தேர்ச்சி பெற்றுள்ள வேலை இல்லாதவர்கள் இந்த பயிற்சியில் பங்கேற்கலாம். அவர்கள் 94427

58363 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம், என பயிற்சி நிலைய இயக்குனர் தீனதயாளன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் சங்கக் கூட்டம்

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாய் நீரினை பயன்படுத்தும் பாசன சங்க விவசாயிகள் கூட்டம், தலைவர் செல்லத்துரை தலைமையில் நடந்தது. அதில் ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாயில் உடைந்த மடைகளை சீரமைத்தல், கண்மாய்க்கு உபரி நீர் வரும் வரத்துகால்வாய்களை சரிசெய்தல், வைகை ஆற்றில் இருந்து பெரிய கண்மாய் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க அரசை வழியுறுத்துதல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சிறுதானியங்கள் கண்காட்சி

திருச்சுழி : திருச்சுழியில் ஸ்பீச் கிராம பேரிடர் பாதுகாப்பு தகவல் மையம், ஆர்.சி.பி.டி.எஸ்., ஆதார மையம், தட்பவெட்ப நீதிக்கான குழந்தைகள் இயக்கம் சார்பாக சிறு தானிய கண்காட்சி மற்றும் செயல் விளக்க முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் முருகன் தலைமை வகித்தார். குழுத்தலைவர் முருகேஸ்வரி வரவேற்றார். நிறுவனர் ஜான் தேவாரம் திறந்து வைத்தார். திட்ட இயக்குனர் எர்ஸ்கின், பேரிடர் பாகாப்பு பயிற்றுனர் அய்யாத் துரை, தொழில் நுட்ப மேலாளர் முத்துக்குமார், பஞ்சவர்ணம் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை களப் பணியாளர்கள், அமைப்பாளர்கள் செய்தனர்.

## தென்மாவட்டங்களில் விவசாய பணிகள்; 2800 டன் உரம் ரயிலில் நெல்லை வந்தது

திருநெல்வேலி : ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட தென்மாவட்டங்களின் விவசாயத்திற்காக 2 ஆயிரத்து 800 மெட்ரிக் டன் உரமூட்டைகள் நேற்று நெல்லைக்கு ரயிலில் வந்து இறங்கின.

தென்மாவட்டங்களில் தற்போது வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்துள்ளது. தொடர்ந்து மழை பெய்துவருவதால் விவசாய பணிகள் மும்முரமாக நடந்துவருகிறது. குறிப்பாக தாமிரபரணி பாசனத்தில் நெல்லையில் 40 ஆயிரம் ஏக்கர், தூத்துக்குடியில் 46 ஆயிரம் ஏக்கரில் நெல்சாகுபடி பணிகள் துவங்கிவிட்டன. மழையை நம்பி மானாவாரியாக விவசாயம் மேற்கொள்ளப்படும் சங்கரன்கோவில், குருவிகுளம், சிவகிரி உள்ளிட்ட பகுதிகளிலும் தற்போது விவசாய பணிகள் துவங்கியுள்ளன. நெல் பயிருக்கு துவக்க காலத்தில் இடப்படும் யூரியா உரத்திற்கு தற்போது தட்டுப்பாடு நிலவுகிறது. இதனை பயன்படுத்தி வியாபாரிகள் பதுக்குவதும், அதிகவிலைக்கு விற்பதும் நடக்கிறது. எனவே நெல்லை மாவட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கலெக்டர் கருணாகரன் நெல்லை மாவட்டதொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனை மையங்களில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தார். இதன்படி நேற்று மாலை நெல்லை ரயில் நிலையத்தில் 2800 டன் உரமூட்டைகள் வந்திறங்கின. அவற்றை லாரிகளில் ஏற்றி பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பும்பணி நடந்தது. இதுகுறித்து நெல்லை வேளாண்துறை இணை இயக்குநர் சந்திரசேகரன் கூறுகையில், மும்பையில் உள்ள ராஷ்ட்ரியா கெமிக்கல் நிறுவனத்தில் இருந்து 2800 டன் உரம் வந்துள்ளது. இதில் ஆயிரம் டன் உரம் நெல்லை மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்க வேளாண்மை கூட்டுறவு மையங்கள் மூலம் அரசு குறிப்பிட்ட விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள ஆயிரத்து 800 டன் உரமும், சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் தனியாருக்கு அனுப்பப்படுகிறது.தற்போது ஒட்டுமொத்தமாக அனைத்து இடங்களிலும் விவசாய பணிகள் துவக்கப்பட்டிருப்பதால் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனை சமாளிக்க மேலும் ஆயிரத்து 330 டன் உரம் நாளை இறக்கப்படுகிறது. அடுத்தடுத்து உரம் வரஇருப்பதால் இனி தட்டுப்பாடு ஏற்படாது என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

## முட்டை விலை 340 காசுகளாக உயர்வு



நாமக்கல்: நாமக் கல் மண்டலத்தில் முட்டை விலை 340 காசுகளாக அதிகரித்துள்ளது.நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில் முட்டை விலையில் மேலும் 4 காசுகள் உயர்த்தப்பட்டு, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 340 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் விலை உயர்ந்து வருவதால், நாமக்கல் மண் டலத்திலும் முட்டை விலை உயர்ந்துள்ளது. கடந்த இரு வாரத்தில் முட்டை விலையில் 15 காசுகள் வரை அதிகரித்துள்ளது.ஒரு கிலோ முட்டைக்கோழி யி66 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.73 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்): பெங்களூரு- 370, சென்னை- 371, மைசூர்- 361, ஐதராபாத்- 345, மும்பை- 385, விஜயவாடா- 338, கொல்கத்தா- 385, பர்வாலா- 355, டெல்லி- 370 காசுகள்.

## ரூ.2,500க்கு விற்கப்பட்ட மதுரை மல்லிகை கிலோ ரூ.500ஆனது



மதுரை: மதுரையில் கிலோ ரூ.2,500க்கு விற்றகப்பட்ட மல்லிகை ரூ.500 ஆக குறைந்தது.முகூர்த்த தினைத்தையொட்டி, கடந்த சனிக்கிழமை

வரலாறு காணாத அளவிற்கு மதுரை பூ மார்க்கெட்டில் மல்லிகைப்பூ கிலோ ரூ.2,500 வரை விற்றது. இது நேற்று திடீரென சரிந்து கிலோ யி500க்கு விற்கப்பட்டது.மற்ற பூக்களின் விலை விபரம் (ஒரு கிலோ): பிச்சிப்பூ ரூ.600, முல்லைப்பூ ரூ.600, கனகாம்பரம் ரூ.1,000, மெட்ராஸ் மல்லி ரூ.300, அரளிப்பூ ரூ.200, தாமரை ரூ.10, செவ்வந்தி ரூ.100, சேந்தி ரூ.50.

<u>**வரும் 25ம் தேதி வரை கோமுகி அணை பாசனத்துக்கு திறப்பு**</u>

சின்னசேலம்: விழுபஃபுரம் மாவட்டத்தில் கல்வராயன்மலையடிவாரத்தில் உள்ள கோமுகி அணையில் இருந்து பாசனத்துக்காக நீர் திறக்கப் பட்டுள்ளது. கச்சிராயபாளையம் அருகே உள்ள கோமுகி அணை நீர்பஃபாசன கால் வாய் திறபஃபு விழா நடந்தது. நிகழஃச்சிகஃகு கலெகஃடர் சம்பத் தலைமைதாங்கினார். காமராஜ எம்பி, கள்ளகஃகுறிச்சி சபஃ-கலெக ஃடர் மாலதி, வடகஃகநந்தல் பேரூராட்சி தலைவர் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலைவகித்தனர். நிகழ்ச்சியில் அமைச்சர் மோகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நீர்பஃபாசன மதகை திறந்து வைத்தார். சின்னசேலம் தாசில்தார் பார்த்தசாரதி, ஒன்றிய சேர்மன்கள், கள்ளகஃகுறிச்சி ராஜசேகர், சின்னசேலம் ராஜேந்திரன், கோமுகி சர்கஃகரை ஆலை சேர்மன் வடிவேலு, விவசாயசங்க தலைவர் மாத்தூர் ராமசாமி, ஊராட்சி தலைவர்கள் மாத்தூர் காமராஜஃ, தாவடிபஃபட்டு அமுதா, தெங்கியாநத்தம் குமரேசன், நிர்வாகிகள் பாபு, கருபஃபன், ஜபஃபான்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். அணை யின் மொத்த நீர் மட்டம் 46 அடி, பாதுகாபஃபு கருதி 44 அடி நீர் மட்டுமே தேக்கப்படுகிறது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, இன்று முதல் வரும் 25ம் தேதி வரை 15 நாட்களுகஃகு மட்டும், பழைய பாசன கால்வாயில் வினாடிகஃகு 60 கனஅடி நீரும், புதிய பாசன கால்வாயில் வினாடிகஃகு 50 கன அடி நீரும் திறந்து விடபஃபட்டுள்ளது.அடுத்த 45 நாட்களுகஃகு (நவ. 26ம் தேதி முதல் ஜனவரி 9ம்தேதி வரை)

பழையபாசன கால்வாயில் வினாடிகக்கு 120 கன அடி நீரும், புதிய பாசன கால்வாயில் வினாடிகக்கு 100 கனஅடி நீரும் திறந்துவிட தீர்மானிகக்கபக் பட்டுள்ளது. புதிய பாசன கால்வாயின் மூலம் மாத்தூர், மண்மலை, கரடிசித்தூர் உள்ளிட்ட 7 கிராமங்களை சேர்ந்த 5000 ஏகக்கர் விவசாயநிலங்களும், பழையபாசன கால்வாயின் 11 அணைகக்கட்டு வழியாக 5800 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

## கோமுகி அணை இன்று திறப்பு 10,800 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது

சின்னசேலம், : கச்சிராயபாளையம் கோமுகி அணை இன்று திறக்கப்படுகிறது. அமைச்சர் மோகன் ஷட்டரை திறந்து வைக்கிறார். இதன் மூலம் 10 ஆயிரத்து 800 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. கள்ளக்குறிச்சி அருகே உள்ள கச்சிராயபாளையத்தில் கோமுகி அணை உள்ளது. இதன் நீர்மட்டம் 46 அடி. அணையின் பாதுகாப்பு கருதி 44 அடி வரை தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழை தீவிரத்தால், கடந்த 10 நாட்களுக்கு முன் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. தற்போது அணையின் நீர்மட்டம் 44 அடியாக உள்ளது. தண்ணீர் இருப்பு 489.65 மில்லியன் கனஅடி, நீர்வரத்து வினாடிக்கு 104 கனஅடியாக உள்ளது. குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து 100 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணை நிரம்பியதை அடுத்து விவசாய பயன்பாட்டுக்காக அணையை திறந்து விட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதையடுத்து கோமுகி அணை இன்று காலை 9.15 மணிக்கு திறக்கப்படுவதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமைச்சர் மோகன் அணை மதகுகளை திறந்து வைக்கிறார். இதில் மாவட்ட ஆட்சியர் சம்பத், காமராஜ் எம்பி, அழகுவேல் பாபு எம்எல்ஏ, விருத்தாசலம் பொதுப்பணித்துறை வெள்ளாற்று வடிகால் நில கோட்ட செயற்பொறியாளர் பெரியசாமி, கள்ளக்குறிச்சி பொதுப்பணித்துறை

உதவி செயற்பொறியாளர் முருகவேல், உதவி பொறியாளர் பிரபு மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். கோமுகி அணை திறப்பால், கச்சிராயபாளையம், வடக்கனந்தல், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, செல்லம்பட்டு, மாத்தூர், மண்மலை உள்ளிட்ட 40 கிராமங்களில் உள்ள 10 ஆயிரத்து 800 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். இன்று முதல் 15 நாட்களுக்கு பழைய, புதிய கால்வாயில் வினாடிக்கு 110 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. பருவ மழையை பொறுத்து கூடுதலாக தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அதிகாரிகள் கூறியுள்ளனர். அக்டோபர் மாதத்தில் திறக்க வேண்டிய கோமுகி அணை நவம்பர் மாதம் 10ம் தேதி தாமதமாக திறக்கப்படுகிறது. மேலும் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட்டால் கடைமடைவரை சென்று சேருமா? என்பது கேள்விக்குறியாகி உள்ளது. பாசன கால்வாய்களை டெண்டர் எடுத்தவர்கள் ஒப்புக்கு தூர்வாரியதால், பல இடங்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.இருப்பினும் விவசாயிகள் கோரிக்கையை ஏற்று உடனடியாக அணை திறக்கப்பட்டதற்கு விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். கடந்த 6ம் தேதி தினகரன் நாளிதழில் கோமுகி அணையை உடனடியாக திறக்க வேண்டுமென செய்தி வெளியானது குறிப்பிடத்தக்கது.

## <u>மடத்துக்குளத்தில் போதிய அளவு யூரியா இருப்பு உள்ளது</u>

உடுமலை, : மடத்துக்குளம் வட்டாரத்தில் போதிய அளவு யூரியா இருப்பு வைக்கப்பட்டுள்ளது என மடத்துக்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள் ளார்.மடத்துகுளம் வட்டாரத்தில் பருவமழை தீவிரமடைந்ததை தொடர்ந்து பழைய ஆயக்கட்டு மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளில் சுமார் நான்காயிரம் ஏக்கர் பரப்பில் நெல், 3500 ஏக்கரில் மக்காச்சோளம், 1200 ஏக்கர் பரப்பில் பயறு வகைகள், ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் யூரியா தயாரிப்பு நிறுவனங்கள் செயல்படாததை தொடர்ந்து பரவலாக யூரியா தட்டுப்பாடு ஏற்பட்டது. வேளாண்துறை யின் முயற்சியால் யூரியா தட்டுப்பாடு நீங்க பெற்று மடத்துக்குளம் வட்டாரத்தில் போதிய அளவு யூரியா இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே மடத்துகுளம் வட்டார விவசாயிகள் தேவையான அளவு யூரியாவை பெற்று பயன் பெறலாம் என மடத்துக்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் தெரிவித்துள்ளார். மேலும் அவர் விடுத்துள்ள அறிக்கையில், அனைத்து சில்லரை உர விற்பனை யாளர்களின் கலந்தாய்வு கூட்டம் வே ளாண்மை உதவி இயக்குனர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், போதுமான அளவு யூரியா கிடைக்க பெற்றுள்ளதால் விவசாயிகளுக்கு தேவை யான யூரியாவை சில்லரை விற்பனையாளர்கள் முறையாக வழங்கு மாறும், எக்காரணத்தை கொண்டும் கூடுதல் விலைக்கு விற்ப னை செய்ய கூடாது என் றும், உரங்களின் இருப்பு மற்றும் விலையை தவறாது தகவல் பலகையில் எழுதி வைக்க வேண்டும், தவறும் பட்சத்தில் உர உரி மம் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. உர தட்டுப்பாடு மற் றும் விலையேற்றம் குறித்து விவசாயிகள் 04252-253550 என்ற தொலைபேசி எண் ணிலோ, 99437 - 37557 என்ற செல்போன் எண்ணி லோ தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

## <u>சின்னமனூர் பகுதியில் சொட்டுநீர் பாசனம் அமைப்பதில் விவசாயிகள் ஆர்வம்</u>

சின்னமனூர், : மழையளவு குறைந்ததன் காரணமாக சிக்கன நடவடிக்கையாக விவசாயத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து விவசாயத்தை காப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கில் விவசாயம் அதிகளவில் நடக்கிறது. சின்னமனூர் பகுதிகளில் எந்தப்பக்கம் திரும்பினாலும் பசுமையான விவசாயம் தலைதூக்கி இருக்கிறது. அதை விட்டால் பொது மக்களுக்கு வேறு வழி இல்லாததால் விவசாயத்தையே முக்கிய

தொழிலாளக கொண்டுள்ளனர். நெல், வாழை, தென்னை, திராட்சை, கரும்பு, தக்காளி, வெங்காயம் மற்றும் அனைத்து விதமான காய் கறிகள், மானாவாரி பயறு வகைகள், சோளம், கேழ் வரகு, மக்காச்சோளம் என தொடர் விவசாயம் மேற் கொண்டு வருகின்றனர்.விவசாயிகளுக்கு முல்லைபெரியாறு மற்றும் நிலத்தடிநீரால் கிணற்றுப் பாசனமும் கைகொடுத்து வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக பருவ மழை தவறி போனதால் புயல் வந்தால்தான் மழையே வரும் என்ற நிலைமை உருவாகி விட்டது. தற்போது சில கண்மாய்கள், குளங்கள் வறண்ட நிலையிலேயே கிடக்கின்றன. நிலத்தடிநீர் மட்டம் பெரிதும் குறைந்து விட்டதால் கிணறுகள் எல்லாம் வறண்டு காணப்படுகிறது. பெரும்பாலான விவசாயிகள் ஆழ்குழாய் கிணறுகள் உருவாக்கி விவசாயத்தை தொடர்ந்து கஷ்டப்பட்டு செய்து வருகின்றனர். இந்த பருவகாலங்களுக்கு ஏற்ப நெல் தவிர்த்து எல்லா பயிர்களும் குறைந்தளவு தண்ணீரை கொண்டு பாத்திகளை மறந்துவிட்டு நேரடியாக பயிரின் வேர் பகுதிக்கே தண்ணீர் கிடைக் கும் விதமாக புதுத்திட்டம் அரசின் மூலமாக கொண்டு வரப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இது விவசாயிகளுக்கு கிடைத்துள்ள பெரிய வரப் பிரசாதம் சொட்டுநீர் பாசன முறையாகும்.ஒரு ஏக்கர் பரப்பில் சொட்டுநீர் பாசனம் அமைக்கும் முறை எடுத்துக்கொண்டால் நடுவில் சென்டராக பிரித்து பிவிசி பைப்புகளை நீளமாக பூமியில் பதிக்கின்றனர். இருபக்கங்களும் சமமாக 7 ஆயிரம் மீட்டர் அளவு டியூப்புகளை நீளம் தகுந்தாற்போல் சரியாக வெட்டி எடுத்து நேரடியாக பயிருக்கு தண்ணீர் சென்றடையும் விதமாக அமைக்கின்றனர்.வேர்பகுதி தவிர்த்து மற்ற இடங்களில் தண்ணீர் சிந்தாமல் சிக்கனமான விவசாயம் மேற் கொள்ளலாம். ஆனால் ஒரு முறை ஒரு ஏக்கருக்க 18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை முதலாக முடக்கப்படுகிறது. ஆழ்குழாய் தண்ணீர் எடுத்து விடுகின்றபோது தண்ணீரில் உள்ள உப்பு படிவதால் 5 ஆண்டுகள் வரையில் தாக்கு பிடிக்கும். அடுத்த ஐந்து ஆண்டுகள் சென்றவுடன் பழைய டியூப்புகளை அப்புறப்படுத்தி மீண்டும் புதிய டியூப்புகள் பொருத்தப்பட வேண்டும்.

தென்னை, வாழை, திராட்சை, கரும்பு, பப்பாளி, கோவக்காய், காய்கறிகள் என அனைத்து விவசாயத்திற்கும் சொட்டுநீர் பாசன முறையினை விவசாயிகள் பின்பற்றி வருகின்றனர். குறைந்தளவு தண்ணீர் பாசனத்தில் சிக்கனமான தடையில்லா விவசாயாமாக காத்து வருகின்றனர். நஷ்டம் ஏற்படாத அளவிற்கு விவசாயத்தை தொடர்கின்றனர். சின்னமனூர் பகுதி விவசாயிகள் சொட்டுநீர் பாசன முறையினை ஆர்வத்துடன் அமைத்து வருகின்றனர்.

## நீர்நிலை கரைகளை உறுதிப்படுத்த பனை விதை நடும் பணி தீவிரம்

பண்ருட்டி: கடலூர் மாவட்டத்தில் உள்ள ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பாக பனை மரங்கள் ஏராளமாக வளர்ந்திருந்தன. இதனால் ஏரி கரைகள் உடையாமல் உறுதியாக இருந்தன. இதில் விளையும் பொருட்கள் அனைத்தும் பனை வாரியம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை ஆகி வந்தது. இதனால் ஏராளமான பனைமர தொழிலாளர்கள் இதை குலத்தொழிலாக செய்து வந்தனர். ஆனால் காலப்போக்கில் செங்கல் சூளை வியாபாரிகள் சூளைக்காக பனை மரங்களை குறைந்த விலைக்கு வாங்கி பயன்படுத்தி வந்தனர். இதனால் பனை மரங்கள் அனைத்தும் காணாமல் போனது. இந்நிலையில் கடலூர் மாவட்டத்தில் மீண்டும் பனை மரம் உற்பத்தி புத்துணர்வு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு பல்வேறு இடங்களில் நடப்பட்டு வருகிறது. இதன் விளைவாக பண்ருட்டி அருகே பண்டரகோட்டை ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் துணைத் தலைவர் லோகநாதன் முன்னிலையில் நேற்று ஏரிக்கரையில் மகளிர் சுயஉதவி குழுவுடன் பனை மர விதைகளை நட்டனர். இதில் ஊராட்சி செயலர் ஆதிமூலம், வார்டு உறுப்பினர்கள், பணித்தள பொறுப்பாளர்கள் பாலகுருநாதன், சிவராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனை அறிந்த பணப்பாக்கம் ஊராட்சியிலும் ஊராட்சி மன்ற தலைவர் ரஜினிகாந்தி கோபாலகிருஷ்ணன் தலைமையில் ஏரி கரையில் பனை மர விதைகளை நட்டனர். இதில்

துணைத் தலைவர் முத்துகுமரன், ஊராட்சி செயலர் அருள்மணி, வார்டு உறுப்பினர்கள், பணி தள பொறுப்பாளர் சுரேந்தர், சிவராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர். தற்பொழுது மழை காலம் என்பதால் பனை மரம் வளர்வதற்கு ஏதுவான காலமாகும். மாவட்டம் முழுவதும் உள்ள ஏரி, குளம், ஆறு ஆகியவற்றின் கரைகளில் பனை மரங்களை உருவாக்கினால் பனை சாகுபடியும் அதிகமாகும். கரைகளின் உறுதி தன்மையும் கூடும். இதன் மூலம் பனை மர தொழிலாளர்களும் பலன் பெறுவார்கள்.

## உழவர் சந்தையில் பட்டாணி ஒரு கிலோ ரூ150க்கு விற்பனை

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தில் பட்டாணி விளைச்சல் குறைந்துள்ள தால், ஊட்டி உழவர் சந்தையில் நேற்று ஒரு கிலோ ரூ.150க்கு விற்பனை செய்யப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்த படியாக மலை காய்கறி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். உருளைக்கிழங்கு, அவரை, முட்டைகோஸ், கேரட், பீட்ரூட், காலிபிளவர், ஊட்டி அவரை மற்றும் பட்டாணி உள்ளிட்டவை அதிகளவில் பயிரிடப்படுகிறது. நீலகிரியில் விளைவிக்கப்படும் காய்கறிகள் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும் தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பப்படுகிறது. கடந்த இரண்டு மாதங்களாக பட்டாணி விளைச் சல் அமோகமாக இருந்தது. இதனால் மார்க்கெட் மற்றும் உழவர் சந்தைக்கு பட்டாணி வரத்து அதிகரித்தது,. உழவர் சந்தையில் பட் டாணி ஒரு கிலோ ரூ.70 முதல் ரூ.90 வரை விற்பனை ஆகி வந்தது. இந்நிலையில் தற்போது பட்டாணி விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளதால், மார்க்கெட் மற்றும் உழவர் சந்தைக்கு வரத்து வெகுவாகக் குறைந்து, உழவர் சந்தையில் நேற்று ஒரு கிலோ பட்டாணி ரூ.150க்கு விற்கப்பட்டது. இதே போல் ஊட்டி அவரையின் விலை கிலோ குறைந்தபட்சம் ரூ.80க்கும், அதிகபட்சம் ரூ.100க்கும்,

பூண்டு கிலோ குறைந்தபட்சம் ரூ.130க்கும், அதிகபட்சம் ரூ.160க்கும் விற்பனையானது.

**<u>நெற்பயிர்களை மடக்கு புழுக்களிடம் இருந்து பாதுகாக்கலாம் வேளாண்துறை ஆலோசனை</u>**

பரமக்குடி, : பரமக்குடி சுற்று வட்டாரத்தில் நெற்பயிர்களை மடக்கு புழுக்களிடம் இருந்து பாதுகாக்க வேளாண்துறை அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். பரமக்குடி வட்டாரத்தில் சுமார் 8 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது அவைகள் 25-30 நாள் பயிராக நிலத்தில் வளர்ந்துள்ளது. தற்போது பெய்து வரும் தொடர் மழை, இரவு நேரங்களில் நிலவும் குறைந்த வெப்ப நிலை, பகல் நேரங்களில் காற்றில் காணப்படும் ஈரப்பதம் போன்ற காரணங்களால் நெற்பயிரில் இலை மடக்கு புழுக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணையா கூறுகை யில், ஆரஞ்சு கலந்த பழுப்பு நிறத்துடன் காணப்படும் ஒரு தாய் அந்து பூச்சியானது மஞ்சள் நிறமுடைய 300 முட்டைகள் வரை இடக்கூடியது. 4 முதல் 6 நாட்களில் முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் 25 நாட்கள் முதல் 30 நாட்கள் வரை நெற் பயிரை தாக்கி சேதத்தை விளைவிக்கிறது. இந்த புழுக்களை அழிப்பதன் மூலம் நெற்பயிரை பாதூக்கலாம். நெற்பயிர்களின் இலைகளில் உள்ள பச்சையத்தை இந்த புழுக்கள் உண்கிறது. பிறகு இலைகளை நீள்வாக்கில் சுருட்டியோ அல்லது இலையின் நுனியையும் அடிப்பாகத்தையும் சேர்த்து மடக்கியோ மெல்லிய இலைகளால் பின்னி உள்ளிருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டி தின்பதால் இலைகள் வெளுத்து பின் காய்ந்து விடும். இப்புழுக்களின் தாக்குதல் வளர்ச்சிபருவம் தொடங்கி கதிர் வெளிவரும் பருவத்தில் அதிகரிக்கும். இதனால் நெல் மணிகள் முற்றுவது பாதிக்கப்பட்டு மகசூல் இழப்பு ஏற்படும். இதை தடுக்க பூச்சி தாக்குதலின் ஆரம்ப நிலையில் தழைச்சத்து உரங்களை இடக்கூடாது. விளக்குபொறி வைத்து தாய் அந்து பூச்சிகளை

கவர்ந்து அழிக்கலாம். பறவைகள் அமர்வதற்கு ஏதுவாக குச்சிகளை ஊன்றுவதால் பறவைகள் அதன் மீது அமர்ந்து புழுக்களை பிடித்து உண்ணும். இதனால் பூச்சிகளின் தாக்குதல் குறையும். இளம்புழுக்களை 3சதவீதம் வேப்ப எண்ணெய் கரைசல் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
ஒரு தூரில் 1 முதல் 2 இலைகள் பாதிக்கப்பட்ட நிலையில் வளர்ந்த புழுக் களை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு குயினால் பாஸ்-25இ.சி. 400மிலி அல்லது புரோபினோ பாஸ்-50இ.சி.200 மிலி பூச்சிகொல்லி மருந்தினை 200லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

**பால்–சர்க்கரை விலை அதிகரிப்பு எதிரொலி: டீ–காபி, ஜூஸ் வகைகள் விலை உயர்ந்தது ஐஸ்கிரீம்கள், இனிப்பு வகைகள் விலையும் உயருகிறது**



சென்னை, பால்–சர்க்கரை விலை அதிகரிப்பை தொடர்ந்து, சென்னையில் டீ–காபி, ஜூஸ் வகைகள் விலை உடனடியாக உயர்ந்தது. ஐஸ்கிரீம்கள், இனிப்பு வகைகள் விலையும் அதிரடியாக உயர்கிறது.

பால் விலை 'கிடுகிடு' உயர்வு

பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டதை அடுத்து, தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் 'ஆவின்' நிறுவனம் கடந்த 1–ந் தேதி முதல் ஆவின் பால் விலையை லிட்டருக்கு ரூ.10 உயர்த்தியது.

தனியார் பால் நிறுவனங்கள் கடந்த ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை பால் விலையை படிப்படியாக லிட்டருக்கு ரூ.8 வரை உயர்த்திய நிலையில், நேற்று அதிரடியாக லிட்டருக்கு மேலும் ரூ.4 உயர்த்தியது. இறக்குமதி வரி உயர்வால் கடந்த 1–ந் தேதி முதல் சர்க்கரை விலையும் கிலோவுக்கு ரூ.3 அதிகரித்தது.

நிர்ப்பந்தம்

பால்–சர்க்கரை விலை உயர்வை அடுத்து, அதன் மூலம் தயாரிக்கப்படும் டீ–காபி, ஜூஸ் வகைகள் விலை அதிகரித்துள்ளது. இதுகுறித்து சென்னை பெருநகர தேனீர் கடை உரிமையாளர்கள் சங்க தலைவர் டி.ஆனந்தனிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:–

பால், சர்க்கரை விலை உயர்வு ‘டீ’ கடை உரிமையாளர்களையும், வாடிக்கையாளர்களையும் வெகுவாக பாதித்துள்ளது. குறிப்பாக தனியார் பால் விலை அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளதால், டீ–காபி விலையை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி உள்ளோம். அதன்படி, சிங்கிள் டீ விலையை ரூ.7–லிருந்து ரூ.8 ஆகவும், காபி விலையை ரூ.8–லிருந்து ரூ.10 ஆகவும் உயர்த்துவதற்கு, அந்தந்த டீ கடை உரிமையாளர் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விலை உயர்வுக்கேற்ப தரமான, சுகாதாரமான டீ–காபித்தூள்களை பயன்படுத்த வேண்டும் என்று அறிவுரையும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

ஓட்டல்களில் டீ–காபி விலை...

சென்னையில் ஒரு சில இடங்களில் டீ–காபி விலை உயர்வு உடனடியாக அமலுக்கு வந்துவிட்டாலும், பெரும்பாலான கடைகளில் பழைய விலையிலேயே டீ–காபி விற்பனை செய்யப்படுகிறது. ஒருசில தினங்களில் அந்த கடைகளிலும் விலை உயர்வு அமலுக்கு வந்துவிடும் என்று தெரிகிறது. ஆவின் பால் மூலம் டீ–காபி தயாரிக்கும் பிரபல ஓட்டல் ஒன்றில் ‘ஆவின்’ பால் உயர்த்தப்பட்ட ஒரு சில தினங்களிலேயே 100 மில்லி லிட்டர் கப் டீ விலை ரூ.25–ல் இருந்து ரூ.30 ஆகவும், 120

மில்லி லிட்டர் கப் காபி விலை ரூ.30–ல் இருந்து ரூ.35 ஆகவும், 120 மில்லி லிட்டர் கப் பால் விலை ரூ.32–ல் இருந்து ரூ.35 ஆகவும் உயர்த்தப்பட்டது. இந்த நிலையில் தனியார் பாலைக்கொண்டு டீ–காபி தயாரிக்கும் ஓட்டல்களில் டீ–காபி விலை அதிரடியாக அதிகரிக்கும் என்று தெரிகிறது.

<u>ஐஸ்கிரீம் விலை</u>

'ஆவின்' பால் விலை உயர்த்தப்பட்ட உடனே அந்த நிறுவனம் தயாரிக்கும் ஐஸ்கிரீம்கள் விலையும் உயர்ந்தது. அதன்படி, ஆவின் பால் விலை உயர்வுக்கு முன்பு ரூ.6–க்கு விற்பனையான 50 மில்லி லிட்டர் வெண்ணிலா கப் ஐஸ்கீரிம் தற்போது ரூ.8–க்கும், ரூ.14–க்கு விற்பனையான 100 மில்லி லிட்டர் கப் ஐஸ்கிரீம் ரூ.16–க்கும், ரூ50–க்கு விற்பனையான ½ லிட்டர் ஐஸ்கிரீம் ரூ.75–க்கும், ரூ.105–க்கு விற்பனையான 1 லிட்டர் ஐஸ்கீரிம் ரூ.145–க்கும், ரூ.380–க்கு விற்பனையான 4½ லிட்டர் ஐஸ்கிரீம் ரூ.550–க்கும், ரூ.15–க்கு விற்பனையான சாக்கோ பார் ஐஸ்கிரீம் ரூ.17–க்கும், ரூ.30–க்கு விற்பனையான கசாட்டா ஐஸ்கிரீம் ரூ.38–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 'ஆவின்' நிறுவன ஐஸ்கிரீம்கள் விலை உயர்ந்தாலும் மழை–பனி காலம் போன்றவற்றை கருத்தில் கொண்டு தனியார் ஐஸ்கிரீம் நிறுவனங்கள் தற்போது விலையை உயர்த்தவில்லை. ஆனால், வரும் பிப்ரவரி மாத தொடக்கத்தில் கண்டிப்பாக தனியார் ஐஸ்கிரீம் விலை அதிரடியாக உயர்த்தப்படும் என்று பிரபல ஐஸ்கிரீம் விற்பனையாளர் (டீலர்) ஒருவர் கூறினார்.

<u>இனிப்பு வகைகள்</u>

இனிப்பு வகைகள் விலை எவ்வளவு அதிகரிக்கும் என்று பிரபல இனிப்பு கடை உரிமையாளர் ஒருவரிடம் கேட்டபோது, 'பால்கோவா, பால்பேடா போன்ற பாலைக்கொண்டு தயாரிக்கப்படும் இனிப்பு வகைகளும், பெங்காலி இனிப்பு வகைகளும் கிலோவுக்கு 10 முதல் 15 சதவீதம் வரை விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. சர்க்கரை விலை உயர்வு காரணமாக

மற்ற வகை இனிப்புகள் விலை கிலோவுக்கு 5 சதவீதம் வரை அதிகரிக் கும். விரைவில் விலை உயர்வு அமல்படுத்தப்படும் என்று கூறினார்.

பாலை கொண்டு தயாரிக்கப்படும் ஆப்பிள், மாதுளை, பைனாப்பிள், சப்போட்டா உள்பட பழ ஜூஸ் வகைகள் ரூ.5 விலை அதிகரித்துள்ளது. தயிரை கொண்டு தயாரிக்கப்படும் லஸ்ஸி விலை ரூ.5 வரை அதிகரித்துள்ளது.

**ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 4 வண்ணங்களில் வளரக்கூடிய கள்ளிச்செடிகள் அறிமுகம்**



ஊட்டி அரசுதாவரவியல் பூங்காவில் 4 வண்ணங்க ளில் வளரக் கூடியகள்ளிச் செடிகள் மற்றும் புதிய மலர் செடிகள் அறிமுகப் படுத்தப்பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவை ஆங்கிலேயர் கள் ஆட்சி செய்த போது,அவர் களின் சிறந்த சுற்றுலா தலமாக நீலகிரி மாவட்டம் விளங்கி யது. இதனால் ஊட்டி அரசு தாவர வியல் பூங்கா, சிம்ஸ் பூங்கா உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தலங்களை அவர்கள் உரு வாக்கினார்கள். இதில் ஊட்டி அரசு தாவர வியல் பூங்காவில் ஐரோப்பா, ஆஸ்திரேலியா உள்ளிட்டபல் வேறு நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட 2 ஆயிரத் திற்கும் மேற்பட்ட தாவர இனங் கள் பராமரிக்கப்பட்டு வருகின் றன. இது தவிர சீசன் காலங் களில் பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப்படுகின்றன.

கள்ளிச் செடிகள் அறிமுகம் இந்த நிலையில் 4 வகை யான வண்ணங்களில் வளரக் கூடிய கள்ளிச்செடிகள் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் நேற்று முதல் முறையாக அறி முகப்படுத்தப்பட்டன. இது தவிர மினியேச்சர் ஜெரிபரா, கிஷாந் தஸ் உள்ளிட்ட 3 வகையான ஆர்க்கிட் மலர்களும், டயாந்தஸ் உள்ளிட்டபல்வேறு மலர் செடி களும்

அறிமுகப்படுத்தப்பட்டன. இது குறித்து பூங்கா அதிகாரிகள் கூறியதாவது:-

பொதுவாக கள்ளிச்செடிகள் பச்சை நிறத்தில் தான் இருக் கும். தற்போது பெங்களூரில் உள்ள தனியார் நிறுவனம் மூலம் திசு வளர்ப்பு முறையில் உருவாக் கப்பட்ட ஆரஞ்சு, சிகப்பு, மஞ்சள், ரோஸ் ஆகிய வண்ணங் களில் வளரக்கூடிய புதிய வண்ண கள்ளிச்செடிகள் ஊட்டி யில் அறிமுகப்படுத்தப்பட்டன.

சுற்றுலா பயணிகள் தற்போது இந்த செடிகள் பூங்காவில் உள்ள நர்சரிக்கு கொண்டு செல்லப்பட்டு வளர்க் கப்படும். அதன் பிறகு சுற்றுலா பயணிகளின் பார்வைக்கு வைக்கப்படும். இது தவிர 3 வகையான ஆர்க்கிட் மலர்கள், மேரிகோல்டு, ரெட்லீப் உள் ளிட்ட செடிகளும் வரவழைக்கப் பட்டு உள்ளன. பூந்தொட்டிகளில் வைக்கப் பட்டு உள்ள இந்த மலர் செடி கள் இன்று (செவ்வாய்கிழமை) முதல் கண்ணாடி மாளிகை யில் அடுக்கி வைக்கப்படும். இந்த பணி நிறைவடைந்ததும் சுற் றுலா பயணிகள் இந்த புதிய மலர் செடிகளை காண அனு மதிக்கப்படுவார்கள். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## <u>ஏரிகளை இணைத்து நீர்த்தேக்கம்: விவசாயிகளிடம் கலந்தாய்வு நடத்த வேண்டும் மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை</u>

திருவள்ளூர், திருவள்ளூரை அடுத்த கும்மிடிப்பூண்டி அருகே உள்ள கண்ணன்கோட்டை, தேர்வாய்கண்டிகை கிராமங்களை சேர்ந்த திரளான விவசாயிகள் நேற்று திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் கொ.வீரராகவ ராவிடம் ஒரு கோரிக்கை மனு அளித்தனர். அதில் அவர்கள் கூறி இருப்பதாவது:–

கும்மிடிப்பூண்டி அருகே உள்ள கண்ணன்கோட்டை ராஜன் ஏரியையும், தேர்வாய்கண்டிகை பெரிய ஏரியையும் இணைத்து நீர்த்தேக்கம் அமைக்க அரசு திட்டமிட்டு அதற்காக நிலத்தை கையகப்படுத்தி வருகிறது. இதற்காக அந்த பகுதியை சேர்ந்த 800 ஏக்கர் விவசாய நிலத்தை

கையகப்படுத்தி உள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறோம். ஒரு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்வதற்கு நாங்கள் சுமார் ரூ.30 ஆயிரம் வரை செலவு செய்து உள்ளோம். விவசாயம் அழிந்து விட்டதால் எங்கள் வாழ்க்கை கேள்விக்குறியாகி விட்டது. எனவே எங்களுக்கு அரசு இழப்பீடு தொகையாக ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வழங்கிய பின்னரே விவசாய நிலங்களை கையகப்படுத்த வேண்டும். மேலும் இது தொடர்பாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகளை ஒருங்கிணைத்து மாவட்ட கலெக்டர் கலந்தாய்வு கூட்டம் நடத்தி விவசாயிகளின் குறைகளை கேட்டறிய வேண்டும். இவ்வாறு அதில் கூறி இருந்தனர்.

மனுவை பெற்றுக்கெண்ட கலெக்டர், அதன்மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

## <u>உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 1,244 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் வழங்கினார்</u>



செய்யாறில் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 1,244 பயனாளிகளுக்கு ரூ.68 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் வழங்கினார்.

1,244 பேருக்கு நலத்திட்டம்

செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழக அரசின் சார்பில் உழவர் பாது காப்பு திட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.பழனி தலைமை தாங்கினார். ஆரணி தொகுதி பாராளு மன்ற உறுப்பினர் செஞ்சி வெ.ஏழுமலை, தனித்துணை ஆட்சியர் ஜோதி, நகரமன்ற தலைவர் ஆர்.பாவை, ஒன்றி யக்குழு தலைவர் எம்.விமலா ஆகியோர் முன்னிலை வகித்த னர். தாசில்தார் ஜி.கோபால் சாமி வரவேற்றார். இதில் தமிழக

தகவல் தொழில்நுட்பத்துறை அமைச் சர் முக்கூர் என்.சுப்பிரமணி யன் கலந்து கொண்டு ரூ.68 லட்சத்து 56 ஆயிரத்து 450 மதிப்பில் 1,244 பயனாளிக ளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

அவர் பேசியதாவது:–

உழவர் பாதுகாப்பு திட்டம்

தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதல்–அமைச் சராக பொறுப்பேற்று 3 ஆண்டுகளில் 3 ஆயிரம் ஆண் டுகள் பேசும் திட்டங்களை நிறைவேற்றியவர் ஜெயலலிதா. கடந்த 2001–2006–ல் முதல்–அமைச்சராக பதவி வகித்த போது விவசாயிகளின் நலன் கருதி உழவர் பாதுகாப்பு திட் டத்தை அறிமுக படுத்தியர் ஜெயலலிதா.

அதன் மூலம் விவசாயிக ளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள். தமிழகத்தில் அனைத்து துறை களிலும் ஜெயலலிதாவின் வழி காட்டுதலோடு அரசின் பல் வேறு திட்டங்கள் பயனாளி களை சென்றடைகிறது. 14 வகையான நலத்திட்டங்களை வழங்கி கல்வியில் புரட்சி என அனைத்து துறையும் சிறப்பாக செயல்படுகிறது. இவ்வாறு அமைச்சர் பேசி னார்.

விபத்து நிவாரண நிதி

மேலும் நகர நிலவரித்திட்டத்தில் 65 பேருக்கு ரூ.2.5 கோடி மதிப்பிலான வீட்டு மனை பட்டா, விபத்தில் பெற் றோரை இழந்த சிறுநாவல் பட்டு அரவிந்தனுக்கு ரூ.2 லட் சத்து 10 ஆயிரம் காசோலை, மின்சாரம் தாக்கி இறந்தவர் குடும்பத்திற்கு முதல்– அமைச்சர் பொது நிவராண நிதியில் இருந்து ரூ.1 லட்சம் ஆகியவற் றையும் அமைச்சர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செய லாளர்கள் எஸ்.கிருஷ்ணன், பச்சையப்பன், ஒன்றிய அவைத்தலைவர் அரங்க நாதன், பேரவை நிர்வாகிகள் கே.ஆர்.தசரதன், கே.வெங்க டேசன், தொகுதி இணைச் செயலாளர் பி.லோகநாதன், மாணவரணி செயலாளர் மகேந்திரன், இளைஞரணி செயலாளர் சி.துரை உள் ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## விவசாய பாசனத்திற்காக கோமுகி அணையில் இருந்து வினாடிக்கு 110 கனஅடி நீர் திறப்பு



கள்ளக்குறிச்சி, விவசாய பாசனத்திற்காக கோமுகி அணையில் இருந்து வினாடிக்கு 110 கனஅடி நீர் திறக்கப்பட்டது.

கோமுகி அணை

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன்மலை அடிவாரத்தில் கோமுகி அணை உள்ளது. இதன் மொத்த உயரம் 46 அடியாகும். இந்த அணைக்கு ஆண்டுதோறும் கல்வராயன்மலை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழை காரணமாக பொட்டியம், கல்படை, மாயம்பாடி ஆகிய ஆறுகள் வழியாக வரும் தண்ணீரை பொதுப்பணித் துறையினர் 44 அடி வரை அணையில் தேக்கி வைத்து அக்டோபர் அல்லது நவம்பர் மாதங்களில் விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். இந்தநிலையில் கடந்த மாதம் தொடர்ந்து பெய்த வடகிழக்கு பருவ மழை காரணமாக 17 அடியாக இருந்த கோமுகி அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து 44 அடியை எட்டியதை தொடர்ந்து அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டுமென தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். அதன்பேரில் தமிழக அரசு, இந்த அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க உத்தரவிட்டது.

அமைச்சர் திறந்து வைத்தார்

அதன்படி கோமுகி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. அணையின் பழைய பாசன வாய்க்கால் மதகு அருகே நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். காமராஜ் எம்.பி., விருத்தாசலம் கோட்ட பொதுப் பணித்துறை செயற் பொறியாளர் பெரியசாமி, கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் மாலதி, கள்ளக்குறிச்சி உதவி செயற் பொறியாளர்

முருகவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் அமைச்சர் மோகன் கலந்து கொண்டு, அணையின் பழைய பாசன மதகு வழியாக வினாடிக்கு 60 கன அடி தண்ணீரையும், புதிய பாசனத்திற்கு 50 கனஅடி தண்ணீரையும் திறந்து வைத்து மலர்களை தூவினார்.

10,860 ஏக்கர் நிலங்கள் பாசனம்

தொடர்ந்து வருகிற 25–ந்தேதி வரை கோமுகி அணையின் பழைய பாசன வாய்க்காலில் வினாடிக்கு 60 கன அடி நீரும், புதிய பாசன வாய்க்காலில் வினாடிக்கு 50 கன அடி நீரும் திறக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து வருகிற 26–ந்தேதியில் இருந்து அடுத்த ஆண்டு ஜனவரி 9–ந்தேதி வரை பழைய பாசனம் மூலம் வினாடிக்கு 120 கனஅடி நீரும், புதிய பாசனம் மூலம் வினாடிக்கு 100 கன அடி நீரும் திறக்கப்பட உள்ளது. இதன் மூலம் புதிய பாசனத்திற்கு உட்பட்ட மாத்தூர், பன்மலை, செல்லம்பட்டு, தாவடிப்பட்டு, கரடிசித்தூர், பால்ராம்பட்டு உள்பட பல்வேறு கிராம விவசாய நிலங்களும், பழைய பாசனத்திற்குட்பட்ட வடக்கனந்தல், மாதவச்சேரி, சோமண்டார்குடி, ஏர்வாய்ப்பட்டினம் என பல்வேறு கிராம விவசாய நிலங்களும் என மொத்தம் 40 கிராமங்களில் உள்ள 10 ஆயிரத்து 860 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறும். இந்த நிகழ்ச்சியில் அழகுவேல்பாபு எம்.எல்.ஏ., பேரூராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன், துணை தலைவர் வெங்கடாசலம், கூட்டுறவு சங்க தலைவர் கருப்பன், கோமுகி அணை பாசன விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி, துணை தலைவர் காமராஜ், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர்கள் நாராயணன், பிரபு உள்பட பலர் கலந்துகொண்டனர்.